1979 ஏப்ரல் 26]

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, அந்த பணிபுரியும் ஆயாக்களுக்கு வருடத்திற்கு இரண்டு வெள்ளைப் புடவைகள் (ட்ரெஸ்) கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : முதலிலே சம்பளத்தைக் கவனிப்போம்.

குன்னூர் நகர 'மார்க்கட்'

*வினா எண். 831—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகரத்தில் ஆற்றின் அருகில் அமைந்துள்ள மார்க்கட் பகுதி மழைக் காலங்களில் வெள்ளத்தினால் சேதம் ஏற்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்,

(ஆ) இந்த பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வுகாண குன்னூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை வரப்பெற்று, அரசின் ஆய்விலுள்ளது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, மேற்படி இடம் குன்னூர் நகரில் ஆற்றின் மையத்தில் ஓரத்தில் இருக்கிறது. ஆற்றின் மையத்தில், ஓரத்தில் இருப்பதால் பெருவெள்ளம் ஏற்படும்போது, மழைநீர் மார்க்கெட்டுக்குள் புகுந்து சேதம் ஏற்படுகிறது. ஆகவே, நகர மக்களுக்கு வசதியாக இருக்கக்கூடிய ஒரு இடத்தில் அந்த மார்க்கெட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்த வெள்ளத்திலிருந்து சேதம் ஏற்படாமலிருக்க முதலில் முயற்சி எடுக்கப்படும். அதை அரசு எடுத்து வருகிறது.

மதுரை நகருக்குக் குடிநீர் வழங்கல்

*வினா எண். 832—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகருக்குப் போதிய குடிநீர் வசதி ஏற்படுத்தும் வகையில் விரைவுத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1979 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

திரு. என். லட்சுமிநாராயணன் : தலைவரவர்களே, மதுரை நகரின் குடிநீர் தேவையைப் போக்குவதற்காக தச்சம்பட்டு, மணலூர், திருப்புவனம் ஆகிய மூன்று இடங்களில் கிணறு தோண்டி, அந்தத் தண்ணீரை மதுரை நகருக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு இருக்கிறதா? அதேநேரத்தில் மதுரையில் வைகை நீரில் 10 டி. எம். சி. தண்ணீர் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது வந்து சேரும்போது பாதி தண்ணீர் ஆவியாகிவிடுவதாலும், மணல் உறிஞ்சுவதாலும் தண்ணீர் வற்றிவிடுகிறது. அதைத் தடுக்க, குழாய்கள் போட்டு, கொண்டுவரும் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மதுரை நகரில் உடனடி குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக திருப்புவனம், மணலூர், சோழவந்தான், மேலக்கால் ஆகிய இடங்களுக்கு மேலக்கால் என்பது சோழவந்தானில், அது 'விதின் பிராக்கெட்'; வைகையாற்றின் மணல் படுகையிலிருந்து வடி குழாய்கள் அமைத்து, நிலத்தடி நீரைக் கொண்டுவந்து, மதுரை குடிநீர் தேவைக்கு உபயோகிக்கும் திட்டம் ஒன்று சுமார் 300 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தீட்டப்பட்டு, தற்சமயம் அது தலைமைப் பொறியாளர் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்பட்டால் நாள் ஒன்றுக்கு சுமார் 2 முதல் 3 மில்லியன் காலன் குடிநீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளது.

[முற்பகல் 9.20]

மதுரை மாநகரத்தில் தேர்தலுக்குப் பின்னால் கொடுத்த வாக்குறுதிக்கேற்ப அவசரம் அவசரமாக தயார் செய்யப்பட்டிருக்கின்ற திட்டமாகும் இது.

அடுத்து இப்போது தண்ணீர் கொடுப்பதற்காக வைகை நீர்த்தேக்கத்தில் 600 மில்லியன் கன அடி நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இந்நீர் கோடை நாட்களில் வைகை ஆற்று தரைப் பகுதியை ஈரப்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்குப் பயன்படுகிறது. இந்த ஒதுக்கீட்டை ஆயிரம் மில்லியன் கன அடியாக உயர்த்தும் குறிப்பு ஒன்றும் அரசின் பொதுப் பணித்துறையின் பரிசீலனையில் உள்ளது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மெத்த மகிழ்ச்சி கொள்வார்கள் என்று தான் எதிர்பார்க்கிறேன்.

1979 ஏப்ரல் 26]

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, மதுரை நகரில் குடிதண்ணீருக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு? அதன் வேலை எப்போது தொடங்கப்படும்? அந்த வேலை எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, நாம் எல்லோரும் சேர்ந்து தேர்தல் காலத்தில் குடி தண்ணீர் அதிகமாகத் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சொர்ணம் உட்பட, திரு அம்பிகாபதி உட்பட. எனவே ஆய்வு விவரமாக செய்திருக்கிறோம். ஆய்வு என்பது எவ்வளவு மதிப்பீடு எப்படி செய்வது என்பதாகும். மிக விரைவிலே செய்வதாக இருக்கிறோம் அதாவது ''ப்ரேக்னெக் ஸ்பீடிலே'' போகிறோம்.

மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்.

* வினா எண். 833—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மன்னார்குடி நகரில் அரசு ஊழிர்களுக்கு வீடு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கான ஒரு செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் சொல்கிறார்கள். அது என்ன காரணம் என்பதை அறிவிக்க இயலுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா என்பது. பரிசீலனையில் உள்ளதா என்று கேட்டிருந்தால் சரியான விடை கிடைத்திருக்கும். அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போது அரசிடம் இதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 132 வாடகை வீடுகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அங்கே